# விடாமுயற்சி கொடுத்த வெற்றி

எஸ். வெங்கடேஷ்வரன்

2006ஆம் ஆண்டிலேயே சரவணன் நாச்சியப்பன் பட்டதாரியாகி இருக்க வேண்டும். அப்போது அவர் சிங்கப்பூர் தொழில்நுட்பக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்தார்.

ஆனால் விளையாட்டுத்தனமாக இருந்ததால் கல்வியில் பின்தங்கிய சரவணன் பல்கலைக் கழகத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்.

"சிறு வயதில் படிக்கும்போது என் பெற்றோர், ஆசிரியர்கள், என்னிடம் கண்டிப்பாக இருந்தனர். அந்த பயத்திலேயே நான் படித்துவிடுவேன். ஆனால் பல்கலைக்கழகத்திற்குச் சென்றபோது எனக்குக் கிடைத்த சுதந்திரத்தை நான் அலட்சியமாகப் பயன்படுத்தி விட்டேன். என் வாழ்க்கை குறிக்கோள் மீது கவனம் செலுத்தாமல் நண்பர்கள் பலரோடு என் நேரத்தை விரயமாக்கினேன்," என்றார் 37 வயது திரு சரவணன்.

எட்டு ஆண்டுகளுக்கு பின் சிங்கப்பூர் சமூக அறிவியல் பல்கலைக்கழகத்தில் பகுதி நேரப் பட்டப்படிப்பை அவர் மேற்கொண்டார். இம்முறை கிடைத்த வாய்ப்பை அவர் நழுவவிடவில்லை. மின்னணுவியல் பொருளியியல் துறையில் முதல் நிலை கௌரவப் பட்டத்தை அவர் பெற்றுள்ளார்.

கோயம்புத்துரில் பிறந்து, பாரதி மெட்ரிகுலேஷன் மேல்நிலை பள்ளியில் படித்தார் சரவணன். தமது பெற்றோருக்கு சிங்கப்பூரில் வேலை கிடைத்ததால் அவர்களுடன் சரவணனும் 1997ஆம் ஆண்டில் சிங்கப்பூர் வந்தார். ஈசூன் தொடக்கக்கல்லூரியில் தம் படிப்பைத் தொடங்கினார். ஏறத்தாழ ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு சிங்கப்பூர் குடியுரிமையை சரவணன் பெற்றார்.

தற்போது சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் பொறியியல் துறையில் முதுகலை பட்டப் படிப்பைத் தொடரும் சரவணன் எதிர்காலத்தில் விரிவுரையாளராக விரும்புகிறார்.

## ச. ஹேமலதா

ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டே படிப்பிலும் நாட்டியத்திலும் கவனம் செலுத்திய 29 வயது ச. ஹேமலதா சிங்கப்பூர் சமூக அறிவியல் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலம், மனோவியல் துறையில் பட்டம் பெற்றுள்ளார்.

2013ஆம் ஆண்டில் அவர் சிங்கப்பூர் நிர்வாகக் கழகத்திலிருந்து 'பொருளாதாரம், நிதி' துறையில் பெற்ற முதல் பட்டத்தை தேசிய கல்விக் கழகம் அங்கீகரிக்கவில்லை. கல்வி அமைச்சு அங்கீகரிக்கும் ஆசிரியராக வேண்டும் என்ற குறிக்கோளோடு அவர் எஸ்யுஎஸ்எஸ் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து படித்தார்.

"கல்வி அமைச்சு அங்கீகரிக்கும் ஆசிரியரானால் கூடுதல் சம்பளம், கற்பித்தல் துறையில் மேல் நிலைகளுக்குச் செல்ல அதிக வாய்ப்புகள் போன்றவை கிடைக்கும்.

"தேசிய கல்விக் கழகத்தில் சேர்ந்து, கல்வி அதிகாரி ஆக விரும்புகிறேன்," என்று ஹேமலதா தெரிவித்தார்.

சிங்கப்பூர் சமூக அறிவியல் பல்கலைக்கழகத்தில் பயின்றுகொண்டே அகமது இப்ராஹிம் உயர்நிலைப்பள்ளியில் முழு நேர இணை ஆசிரியராகப் பணிபுரிந்து ஆங்கிலம், சமூக அறிவியல், வர்த்தகத் திறன்கள் ஆகிய பாடங்களைக் கற்பித்தார்.

பள்ளியில் கற்றுக்கொடுப்பதோடு வாரயிறுதி நாட்களில் நிருத்யாலயா கவின் கலைக் கழகத்தில் பரத நாட்டியத்தையும் கற்பித்து வருகிறார்.

சுமார் ஆறு வயதிலிருந்து நாட்டியத்தில் ஈடுபட்டு வரும் இவர், கனடா, பாலி, ஷங்காய் போன்ற நாடுகளுக்குச் சென்று நடனங்களைப் படைத்துள்ளார்.

"நேரத்தை முறையாக நிர்வகிப்பது முக்கிய திறன். நேர அட்டவணை ஒன்றை உருவாக்கி அதைத் தவறாமல் பின்பற்றினேன்," என்றார் ஹேமலதா.




வேலை செய்துகொண்டே பகுதி நேரமாகப் பட்டப்படிப்பு படித்த ரா. அபிராமி. கிடைத்த சம்பளத்தைக் கொண்டு கல்விக்கான செலவை இவர் கவனித்துக்கொண்டார்.



(மேல் படம்) பட்டம் பெற தமக்குக் கிடைத்த இரண்டாம் வாய்ப்பை நழுவவிடாமல் பயன்படுத்திக்கொண்ட சரவணன் நாச்சியப்பன் தாம் பெற்ற பட்டத்தைத் தமது குடும்பத்தாரிடம் காட்டி மகிழ்கிறார்.



(வலது படம்) ஆசிரியர் பணியிலும் பரத நாட்டியத்திலும் முழு ஈடுபாட்டுடன் இருந்தபோதிலும் படிப்பில் கவனம் சிதறாமல் பட்டம் பெற்ற ச. ஹேமலதா.

**படங்கள்: சிங்கப்பூர் சமூக அறிவியல் பல்கலைக்கழகம்**

## ரா. அபிராமி

தந்தை மட்டும் பணிபுரியும் வீட்டில், இல்லத்தரசியாக உள்ள தம் தாயாரோடும் மூன்று தங்கைகளோடும் வாழ்ந்து வருகிறார் 25 வயது ரா. அபிராமி. தொழில்நுட்பராகப் பணிபுரியும் தம் தந்தையின் மாதச் சம்பளம் $2,000.

அதனைக் கொண்டு குடும்பத்தின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதே சவால் மிக்கதாக இருந்தது.

நிதிச் சுமையை எதிர்நோக்கிய அபிராமி தமது பட்டப்படிப்புக்கான செலவை தாமே பார்த்துக் கொண்டார். பகுதி நேரமாகப் படித்துக் கொண்டே உயிர் மருத்துவப் பொறியியல் துறையில் பட்டத்தைப் பெற்றுள்ளார்.

"என் தந்தையின் சம்பளத்தைத் தான் நம்பி வாழ்கிறோம். என் மூன்று தங்கைகளும் படித்து கொண்டிருக்கிறார்கள். ஆகையால் நானே பணம் சம்பாதித்துப் படிக்க வேண்டிய சூழ்நிலை எழுந்தது.

"கடினமாக உழைத்து இன்று பட்டதாரியாகியுள்ளேன். இன்னும் நிறைய படிக்க விரும்புகிறேன்," என்று தமிழ் முரசிடம் தெரிவித்தார் அபிராமி.

நீ ஆன் பலதுறைத் தொழிற் கல்லூரியில் உயிர் மருத்துவ அறிவியலில் தம் பட்டயத்தைப் பெற்ற பின், சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தில் சுமார் இரண்டு ஆண்டுகளும் அதன் பின் சிங்கப்பூர் தொழில்நுட்பக் கழகத்திலும் (எஸ்ஐடி) கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகளாக இன்றுவரை உயிரியல் சார்ந்த கற்பித்தலையும் ஆராய்ச்சியையும் செய்து வருகிறார்.

12ஆம் முறையாக நடைபெறும் வருடாந்திர அறிவியல் கூட்டத்தில் எஸ்யுஎஸ்எஸ் மற்றும் எஸ்ஐடி பல்கலைக்கழகங்களைப் பிரதிநிதித்து பட்டக்கல்விப் பிரிவில் தங்க விருதை வென்றார் அபிராமி.